**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (''நிறுவனத்தின்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ரூபா 60,794,015 கிரயமான ஆதனங்கள், பொறிகள் | 2023.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 63,095,588 என | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட |

| | | |
|---|---|---|
| மற்றும் உபகரணங்களின் மொத்த கொண்டு செல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்ள முடியும். இருப்பினும், தற்போது நிலையான சொத்து பதிவேட்டினை நாளதுவரையாக தயாரிக்கப்பட்டுள்ளது. நியமத்தின் (SLPAS) 49 ஆம் பந்தி இன் படி அனைத்து நடைமுறை அல்லாத சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தப் பணிகள் முடிந்த பிறகு, அனைத்து நடைமுறையல்லாத சொத்துகளின் கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துகளின் மொத்த கொண்டு செல்லும் பெறுமதி வெளியிடப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் இணைந்து 03 பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்கும் திட்டத்திற்காக அதிகாரசபையால் மீளாய்வாண்டில் வழங்கிய ரூபா 10,564,786 தொகையை வருமானமாக மற்றும் செலவிடப்பட்ட ரூபா 5,534,456 செலவுகளாக அங்கீகரிக்கப்படாது மீதமுள்ள ரூபா 5,030,330 வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளாக நிதிககூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | இந்த செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 10,564,786 தொகையானது நிறுவனத்தின் இயல்பான செயல்பாடுகளில் இருந்து உருவாக்கப்படாததால் வருமானமாக கணக்கிடப்படவில்லை. எனவே, இந்த செயற்திட்டத்தில் உள்ள பரிவர்த்தனைகள் ஒரு கட்டுப்பாட்டு கணக்கு (Control Account) மூலம் கணக்கிடப்பட்டுள்ளது. | அனைத்து வருமானம் மற்றும் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், வங்கிக்கு நேரடியாகப் பெறப்பட்ட வைப்புத்தொகை பெறுமதியான ரூபா 341,685 அடையாளம் காணப்பட்டு | மாணவர்கள் நேரடியாக அனுப்பும் பணத்திற்கான தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் போன்ற விவரங்களை உள்ளிடுமாறு | நேரடி வங்கி வைப்புகளை அடையாளம் காண முறையான வேலைத்திட்டம் உருவாக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, இதனால் வங்கிக்கு நேரடியாக அனுப்பப்படும் பணத்தைக் கண்டறிந்து கணக்கு காட்ட முடியும். | வேண்டும். |
| (இ) | பதுளை பயிற்சி நிலைய கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக 2023 அக்டோபர் 12 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 600,000 வைப்புத் தொகையில், மீளாய்வாண்டுக்கான வாடகைச் செலவான ரூபா 150,000 செலவுகளாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை 2024 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுகான செலவுகளைக் கண்டறிந்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கணக்காய்வின் கணிப்பீடுகளின் படி, ரூபா 3,908,650 மதிப்புள்ள மென்பொருள் மற்றும் மென்பொருள் அபிவிருத்திச் சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதிக்குள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட வேண்டும், ஆனால் நிதிக்கூற்றுக்களில் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 3,554,560 ஆக ரூபா 364,090 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில், கணினி மென்பொருளும் மீள்மதிப்பீடு செய்யப்படுவதால், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பின் அடிப்படையில் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு செலவு மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (உ) | இரத்தினபுரி நிறுவக வளாகத்திலுள்ள மின் பிறப்பாக்கியின் சேவை ஒப்பந்தத்திற்காக மீளாய்வாண்டிற்கு செலுத்த வேண்டிய ரூபா 148,680 தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | இந்தத் தொகையானது 2024 இறுதிக் கணக்குகளில் முந்தைய ஆண்டு சரிசெய்தலாக திருத்தப்படும். | ஆண்டுக்கான செலவுகள் கண்டறியப்பட்டு முறையாகக் கணக்கிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,796,846 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 5,319,778 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,116,624 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 7,135,428 இனால் மற்றும் மூலதன முதலீட்டு செலவினம் ரூபா 9,699,956 இனால் அதிகரித்திருந்த போதிலும், பாடநெறி வருமானம் ரூபா 15,291,825 இனால் மற்றும் திறைசேரி மானியங்கள் ரூபா 10,441,478 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூடுதலாக செலுத்திய சம்பள மீதியினுள் 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து தவணை முறையில் மீளப்பெற வேண்டிய ரூபா 466,762 ரூபா 07 வருடங்களாக வசூலிக்கப்படாமல் உள்ளது. | இந்த 04 உத்தியோகத்தர்களும் நிறுவனத்தை விட்டு வெளியேறிய உத்தியோகத்தர்கள என்பதுடன், அவர்களில் இருவர் தவணை முறையில் பணம் செலுத்த சம்மதித்துள்ளதுடன் ஏனைய இருவரின் நிலுவைப் பணத்தை மீட்பதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அதற்கான சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | அறவிடப்பட வேண்டிய சம்பளம் உடனடியாக வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (ஆ) | எதிர்காலத்தில் பணியாளர் வெளியேறும் பட்சத்தில் செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகையை அதிக வருமானம் ஈட்டும் மூலத்தில் முதலீடு செய்ய வேண்டும் என்றாலும், அவ்வாறு செய்யாமல் ரூபா 3,304,898 ஒரு ஊழியர் பணிக்கொடை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. | இந்த பணிக்கொடை நிதியானது நிலையான வைப்பு கணக்கு மற்றும் சேமிப்பு கணக்கு மற்றும் பணியாளர் திடீரென வெளியேறும் பட்சத்தில் நிதியை மாற்றுவதற்காக சேமிப்பு கணக்கிலும் பராமரிக்கப்படும். எவ்வாறாயினும், அந்தச் சேமிப்புக் கணக்கின் ஒரு பகுதியை நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றுவது தொடர்பாக பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளேன். | அதிக நலன்கள் கிடைக்கும் வகையில் பணிக்கொடை முதலீடு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையில் சாத்தியமான இரத்தினங்கள் இருப்பிடங்கள் பற்றிய தகவல்களை ஆய்வு செய்து, அந்தத் தகவல்களைக் கொண்ட தரவு கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் நில உரிமையாளர்களை சுரங்க நடவடிக்கைகளுக்கு வழிநடத்துதல் ஆகியவற்றின் முதன்மை நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட “இலங்கையில் இரத்தினக்கல் படிமங்கள் காணப்படும் இடங்களை ஆய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் செயற்திட்டம்” இற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 30,589,687 செலவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட போதிலும், இந்த செயற்திட்டத்தின் மேலதிக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையுடன் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ளாததால் ஆராய்ச்சி முடிவுகள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இரத்தினக்கல் படிமங்களை ஆராய்ச்சி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் எமது நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்ட புதிய இரத்தினச் சாத்தியமுள்ள பகுதிகள் சுரங்கத்திற்கான பரிந்துரைக்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் பின்தங்கிய தன்மை குறித்து எமது நிறுவனத்தின் பணிப்பாளர் சபை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், இந்த காணிகளை கைத்தொழில்மயமாக்குவதற்கான ஏற்பாடுகளை கைத்தொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற, பணிப்பாளர் சபை மற்றும் வரிசை அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி செயல்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 136 ஆகவும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உண்மையான பதவியணி 64 ஆகவும் இருந்தது. அதன்படி, பதவியணியில் 72 பணியாளர்கள் அதாவது மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் 52 சதவீதம் | இந்த வெற்றிடங்களை நிரப்புவது குறித்து அமைச்சிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், தேசிய கொள்கை முடிவுகளின்படி ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும், 2024.03.15 ஆந் திகதி அன்று இந்தப் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அனுமதியைப் பெறுவதற்கு அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | தேவையான பதவியணியை நியமித்து, நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடமாக உள்ளது. அந்த வெற்றிடங்களில் 04 விரிவுரையாளர் பதவிகள், 06 சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 09 பயிற்சி உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக இருந்தமையினால், மனித வளப் பிரச்சினையானது, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக இயங்குவதற்கு தடையாக இருந்தது. | | |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள 31 பணிகளில், 14 பணிகளுக்கு ரூபா 20.675 மில்லியன் வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, ஆனால் உண்மையான செலவு ரூபா 9.094 மில்லியன் ஆகும், எனவே இந்த 14 பணிகளின் நிதி முன்னேற்றம் 44 சதவீதம் ஆகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பயிற்சிப் பிரிவு தொடர்பான ஏற்பாடுகள் எஞ்சுவதற்கு இரத்தினவியல் மற்றும் ஆபரண டிப்ளோமா பாடத்தின் பெரும்பாலான விரிவுரைகளை இணையவழி மூலம் செயல்படுத்துதல், தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின்படி கூறுவிலை கோரப்பட்ட போதிலும், எதிர்பார்த்த விவரக்குறிப்புகளைக் கொண்ட கூறுவிலைகள் கிடைக்காமை, ஆண்டின் இரண்டாம் பாதியில் கனமழை பெய்தமை, குறைபாடுகளுடனான இரத்தினக்கற்களின் தேவையான அளவினை மானியமாக நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தமையால் அதற்காக கிரயம் மேற்கொள்ள நேராமை, தூய தரமான இரசாயனப் பொருட்கள் பற்றாக்குறையால் கொள்முதல் செய்வதில் தாமதம், போன்றவற்றின் காரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ளல் தாமதமடைந்தமை மற்றும் ஆய்வக அங்கீகாரத்திற்கான பணிகளை வருட இறுதிக்குள் மேற்கொள்ள இயலாமை போன்றவை தாக்கமளித்திருந்தன. | செயல்பாடுகளை பாதிக்கக்கூடிய அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக, 2016 ஆம் ஆண்டு ரூபா 14,204,402 செலவிடப்பட்டு 30 வருட குத்தகை அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட காணியில் மீளாய்வாண்டு வரையிலும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் காணி 07 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து கட்டடத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | உரிய பணியை உள்ளடக்கி பெறுகைகள் நிகழ்ச்சித்திட்டத்தினை நாளதுவரையாக்கி, அதற்கேற்ப பணிகளை மேற்கொள்ள வேண்டும். |